உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 03.07.2026 • மலர் 04 • இதழ்: 184 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 03.07.2026 • Vol : 04 • Issue : 184 • Page : 4 • Rs. 5/-

# மேகேதாட்டு அணையே வேண்டாம் எனும்போது நடுவர் மன்றம் எதற்கு?

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பேச்சு



மேட்டூர், ஜூலை 3

"மேகேதாட்டு அணையே வேண்டாம் என்றால், ஏன் நடுவர் மன்றம் என்பது நம் நிலைப்பாடு" என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பேசினார்.

காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டு பகுதியில் புதிய அணை கட்டும் முயற்சியில் கர்நாடகா அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதனை கண்டித்து பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் விழிப்பணர்வு நடைபயணம் பொதுக்கூட்டம் மேட்டூரில் நடந்தது.

அந்தப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசியது: "மேகேதாட்டு அணை குறித்து இன்றைய இளைஞர்கள், பொது மக்களுக்கும் புரிதல் இல்லை. இந்த அணையை கட்டினால் 5.5 கோடி மக்களுக்கு குடிநீர் கிடைக்காமல் போய்விடும். காவிரி குண்டாறு திட்டம், மதுரை காவிரி உபரிநீர் திட்டம், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் என பல்வேறு திட்டங்களுக்கு காவிரி நீர் தான் கிடைக்கிறது.

தமிழகத்தில் 38 மாவட்டங்களில் 28 மாவட்டங்கள் காவிரி ஆற்றை நம்பி தான் உள்ளது. கர்நாடகவில் 1920ம் ஆண்டு ஓர் அணை, 1970, 1971, 1972 ஆகிய ஆண்டுகளில் 3 அணைகள் என 4 பெரிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. 4 அணைகளில் 115 டிஎம்சி தண்ணீர் சேமிக்கப்படுகிறது.

மேட்டூர் அணையில் 93 டிஎம்சி மட்டுமே தண்ணீர் சேமிக்கப்படுகிறது. மேகேதாட்டு அணை கட்டிவிட்டால், கர்நாடகா மேலும் 70 டிஎம்சி நீரை சேமிக்க முடியும். காவிரி நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் என யார் சொன்னாலும் கர்நாடகா கேட்பதில்லை. கர்நாடக முதல்வர் மேகேதாட்டு அணை குடிநீருக்காக மட்டும் கட்டுவதாக கூறுவதை நம்ப முடியுமா?

பெங்களூரு நகரின் குடிநீருக்கு 5 டிஎம்சி இருந்தால் போதும். ஆனால், 70 டிஎம்சியில் அணை தேவையா? அணை கட்டுவது தமிழகத்துக்குப் பேராபத்து, பாலைவனமாகி விடும் என்பதை உணர வேண்டும்.

மத்தியில் ஆளும் கட்சி யார் வந்தாலும் கர்நாடகவுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஏனென்றால், அங்கே காங்கிரஸ், பாஜக தான் மாறி மாறி வருகின்றனர்.

மேகேதாட்டு அணை தொடர்பாக தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தபோது எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி திருத்தம் கொண்டு வந்ததாக சொன்னார்கள். அதில், மேகேதாட்டு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மேகேதாட்டு அணையே வேண்டாம் என்றால், ஏன் நடுவர் மன்றம் என்பது நம் நிலைப்பாடு.

இன்றைய இளைஞர்கள் அரசியல் மாற்றதை சோஷியல் மீடியாவில் கொண்டு வந்தது போன்று மேகேதாட்டு விஷயத்திலும் அதிகம் பகிர்ந்து தீர்வு கொண்டு வர வேண்டும். ஜல்லிக்கட்டு போன்று இந்த விஷயத்தை இளைஞர்கள் அணுக வேண்டும். காவிரி நம் உரிமை, அதனை மீட்க வேண்டும்" என்று அவர் பேசினார்.

தொடர்ந்து, மேகேதாட்டு அணை கட்டினால் ஏற்படும் பாதிப்புகள் அடங்கிய பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி அன்புமணி நடைபயணம் மேற்கொண்டார். பின்னர், அணையின் இடதுகரையான 16 கண் மதகு பகுதியில் அன்புமணி பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், பாமக முன்னாள் எம்எல்ஏ சதாசிவம், வேலுசாமி, அதிமுக எம்எல்ஏ வெங்கடாஜலம், முன்னாள் எம்பி சந்திரசேகரன் மற்றும் பாமக, அதிமுக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க.வில் புதிய செயலாளர்கள் நியமனம்: எடப்பாடி பழனிசாமி முக்கிய அறிவிப்பு

சென்னை, ஜூலை 3

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் M.M. கோபி அவர்கள் இன்று முதல் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர், கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர் மற்றும் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளராகக் கீழ்க்கண்டவர்கள் கீழ்க்காணும் பொறுப்புகளுக்கு இன்று முதல் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக அமைப்புச் செயலாளர்:

S.T.K. ஜக்கையன், B.A., B.L., Ex. M.P., Ex. M.L.A., (க.புதுப்பட்டி, தேனி மேற்கு மாவட்டம்)

கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர்:

M.M. கோபி, M.A., B.L.., அவர்கள் (பிச்சாண்டி லேன், ராயபுரம், வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டம்)

கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்:

D.K. ராஜேந்திரன் அவர்கள் (தருமபுரி, தருமபுரி கிழக்கு மாவட்டம்)

கழக உடன்பிறப்புகள் இவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கடை அருகே விபத்தில் சிக்கிய வாலிபர் பலி



புதுக்கடை, ஜூலை. 3

புதுக்கடை அருகே உள்ள விழுந்தயம் பலம் பகுதியை சேர்ந்தவர் செல்வன் மகன் ரெதீஷ் (30) இவருக்கு இன்னும்திருமணம்ஆகவில்லை. வெல்டிங் தொழில் செய்து வந்தார். கடந்த 28ம் தேதி இவர் வேலை முடித்து தனது பைக்கில் கருங்கல் புதுக்கடை சாலையில் வந்து கொண்டிருந்தார். கைசூண்டி என்ற பகுதியில் வரும்போது இவர் ஓட்டிக்கொண்டு வந்த மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறி சாலையில் கவிழ்ந்தது. இதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. ரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை அக்கம்பக்கத்தினர் உடனடியாக மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து அங்கிருந்து ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ரெதீஸ் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்தார். இது குறித்து அவரது தாயார் ராஜம் என்பவர் புதுக்கடை போலீசில் புகார் செய்தார். புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## தவெகவில் 4 எம்.எல்.ஏக்களுக்கு புதிய பொறுப்பு வழங்கி விஜய் உத்தரவு

சென்னை, ஜூலை 3

தமிழக வெற்றி கழகம் (தவெக) கட்சியில் அமைப்பு ரீதியாக புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு, புதிய மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 4 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

முனிரத்தினம்: உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளராக நியமிக்க ப்பட்டுள்ளார் ரெட்டியார்பட்டி நாராயணன்: நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி தென்கிழக்கு மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

மரியை ஜான்: பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநெல்வேலி மத்திய மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

ஆர்.எஸ். முருகன்: திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி வடக்கு மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

அபிஷேக்: போளூர் சட்டமன்ற உறுப்பினர், திருவண்ணாமலை வடமேற்கு மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

சட்டமன்ற தேர்தல் முடிந்து தவெக ஆட்சி பிடித்த பின்னர் கட்சியைப் பலப்படுத்தும் விதமாக இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. கட்சியில் புதிதாக இணைந்து வெற்றி பெற்ற சுமார் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு மாவட்ட செயலாளர் பதவி வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். அதில் முதற்கட்டமாக 5 நபர்களுக்கு இந்த பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே கட்சியில் நீண்ட காலமாக (ரசிகர் மன்ற காலம் முதல்) உழைத்த மூத்த நிர்வாகிகள் அதிருப்தி அடையாத வண்ணம், பிற தொகுதிகளுக்கான நியமனங்கள் குறித்து கட்சித் தலைமை தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் நகராட்சி புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகள் ரூ.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### புதுக்கடை அருகே

## பைக்குகள் மோதி விபத்து தாய், மகள் படுகாயம்

புதுக்கடை, ஜூலை. 3

பாலூர் பகுதியை சேர்ந்தவர் நாராயணன் குட்டி மனைவி ஸ்ரீஜா(43). இவர் சம்பவ தினம் தனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் தனது மகள் அக்ஷரா (21) என்பவர் உடன் பைக்கில் சென்று கொண்டிருந்தார். ஸ்ரீஜா பைக்கை ஓட்ட அக்ஷரா பின்னால் அமர்ந்து இருந்தார். அப்போது ஒளிபாறை என்ற பகுதியில் வரும் போது எதிரில் வந்த இருசக்கர வாகனம் ஒன்று அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ஸ்ரீஜா ஓட்டிய பைக்கில் மோதி தள்ளிவிட்டு நிற்காமல் சென்று விட்டது.

இதில் தூக்கி வீசப்பட்ட ஸ்ரீஜா மற்றும் அக்ஷரா ஆகியோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மார்த்தாண்ட அருகே காஞ்சிரகோடு பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து, விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற பைக் குறித்து விசாரித்து வருகின்றனர்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701



## வடசேரியில் நவீன பஸ் நிலைய பணிக்காக நடைபாதை இடிப்பு

### வியாபாரிகள் ஜேசிபி வாகனத்தை சிறைபிடித்து போராட்டம்

நாகர்கோவில், ஜூன். 3

நாகர்கோவில் மாநகர மக்களின் நீண்டகால தேவைகளில் ஒன்றான வடசேரி நவீன ஒருங்கிணைந்த பஸ் நிலையம் அமைக்கும் பணிகள் நேற்று துவங்கியது. சுமார் 69 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அதிநவீன வசதிகளுடன் இந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கான டெண்டர் கோரப்பட்டு, கட்டுமான பணிகளுக்கான பணி ஆணையும் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது.

வடசேரி சந்தையின் மேற்கு பகுதியில் உள்ள காலி இடத்தில் இதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்த ஒருங்கிணைந்த பேருந்து நிலையப் பணிகள் நேற்று காலை துவங்கிய நிலையில், அங்குள்ள மார்க்கெட் பகுதிக்கு பொது மக்கள்வருவதற்கானபொதுப்பாதையை இடிக்காமல் பணிகள்

மேற்கொள்ளப்படும் என உறுதி அளித்ததைதொடர்ந்துஅங்குள்ளவியாபாரிகள் பேருந்து நிலைய பணிக்கு அனுமதித்தனர்.

ஆனால் வியாபாரிகளின் கடைகளுக்கு வரும் பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையை இடித்து பணிகள் துவங்கியதால் ஆத்திரமடைந்த வியாபாரிகள் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த பணிகளை தடுத்து நிறுத்தியதுடன் ஜேசிபி இயந்திரத்தையும் சிறை பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் பேச்சுவார்த்தைக்கு பின் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததால் போராட்டம் கைவிடப்பட்டது.

## குறுவை நெற்பயிர் காப்பீடு செய்ய 31 ஆம் தேதி கடைசி நாள்: கலெக்டர் தகவல்




தஞ்சாவூர் ஜூலை 3

குறுவை நெற்பயிருக்கு காப்பீடு செய்ய வருகிற 31 ஆம் தேதி கடைசி நாள் என தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

வேளாண்மை துறையில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டம் எதிர்பாராமல் இயற்கை இடர்பாடு களால் ஏற்படும் பயிர் மகசூல் இழப்பில் இருந்து காத்து விவசாயிகளில் வாழ்வாதாரத்தை காத்திட மத்திய மாநில அரசின் பங்களிப்போடு செயல்பட்டு வருகிறது

தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை நெல், வாழை, மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு நடப்ப ஆண்டு காரீப் பருவத்தில் பயிர் காப்பீடு செய்து கொள்ள பொது காப்பீடு நிறுவனம் மற்றும் அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி தேர்வு செய்யப்பட்டு பயிர் காப்பீடு பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. குறுவைப் பயிர் காப்பீடு கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூபாய் 778 மட்டும் செலுத்த வேண்டும் கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் கடன் பெறும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் மூலமாக பதிவு செய்ய இயலும், கடன் பெறாத விவசாயி கள் பொது சேவை மையங்கள் மூலமாகவோ, தேசிய மயமாக்க ப்பட்ட வங்கிகள்மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலா ம்கட்டணத் தொகையை செய்த பின்பு அதற்கான ரசீதை பொது சேவை மையங்கள் மற்றும் தொடக் க வேளாண்மை கூட்டுறவு சங்கங் களில் பெற்றுக் கொண்டு பதிவே ற்றம் செய்யப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் குறிப்பாக பருவ ம், கிராமத்தின் பெயர் மற்றும் நிலத்தின் உரிமையாளர் குத்தகை தாரர் ஆகிய விவரங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் எனவே விவசாயிகள் கடைசி தேதி வரை காத்திருக்காமல் முன் கூட்டியே காப்பீடு செய்து கடைசி நேரத்தில் பதிவு செய்வதில் ஏற்ப டும் பல்வேறு சிரமங்களை தவிர் க்க வேண்டும். மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் தேவரசம்பட்டியில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் ஒன்பதாவது சுற்று கோமாரி நோய் தடுப்பு ஊசி செலுத்தும் பணிகளை மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா துவக்கிவைத்தார். இந்த ஆவின்போது பொது மேலாளர் மருத்துவர் கே. மாலதி, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் மருத்துவர் முருகலட்சுமி, கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் மருத்துவர் பிரகாஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் உடனிருந்தனர்.

## பாலக்கோட்டில்

# ஊரக வளர்ச்சி துறை சார்பில் விபி கிராம்ஜி திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு



தருமபுரி ஜூலை 03

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியம், கணபதி ஊராட்சியில் உள்ள காட்டுகொட்டாய் கிராமத்தில் விபி கிராம்ஜி திட்டம் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

பாலக்கோடு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சர்வோத்தமன், நீலமேகம் ஆகியோர் நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசினர். இத்திட்டம் 17 2026 முதல் அமலுக்கு வந்து செயல்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்திற்கும் ஆண்டுக்கு 125 நாட்கள் சட்டபூர்வ வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

வேலை செய்ததற்கான ஊதியம் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கப்டாவிட்டால் அதற்கான தாமத ஊதிய இழப்பீடும் சட்டப்படி வழங்கப்படும். மேலும் வேலையின்மை உதவித் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான ஊதியம் இடை தரகர்கள் இன்றி நேரடியாக அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படும். இது வெறும் வேலை வாய்ப்பாக மட்டுமின்றி நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய நீடித்த வாழ்வாதார சொத்துக்களை உருவாக்குவதில் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது. இந்த திட்டத்தின் மூலம் வறுமை கோட்டிற்க்கு கீழ் உள்ள குடும்ப பெண்கள், பழங்குடியினர், மாற்று திறனாளிகள், வயது முதிர்ந்தோர், திருநங்கைகள் என சமுதாயத்தில் பின்தங்கியுள்ள அனைத்து தரப்பினருக்கும் பயன் உள்ளதாகவும், நீர் பாதுகாப்பு பணிகள், அடிப்படை ஊரக கட்டமைப்பு பணிகள் ஊரக வாழ்வாதாரம் மற்றும் பேரிடர் மேலாண்மை பணிகள் என மொத்தம் 318 வகையான பணிகள் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஒன்றிய பொறியாளர் முருகன் பஞ்சாயத்து செயலாளர் முனிவேல் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# குமரி கடற்கரை சாலையில் ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்



கன்னியாகுமரி, ஜூலை.3

கன்னியாகுமரி கடற்கரை சாலை நடைபாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட கடைகளை நேற்று அகற்றி நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது.

கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சாலையில் உள்ள காந்தி மண்டபம் தொடங்கி காமராஜர் மண்டபம், சன்செட் பாயிண்ட் வரை உள்ள நடைபாதையில் சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல முடியாத அளவில் நடைபாதை வியாபாரிகள் ஆக்கிரமித்து வியாபாரம் செய்து வந்தனர். சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல அமைக்கப்பட்டுள்ள நடைபாதை கடைகளை அகற்றி சுற்றுலா பயணிகளுக்கு நடந்து செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்று நகராட்சி நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் இந்த சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சி நிர்வாகம் முடிவு செய்து ஆக்கிரமிப்பு கடை உரிமையாளர்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது. வருவாய்துறை, காவல்துறையுடன் இணைந்து நகராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ளும்என்றுஅறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று காலை கன்னியாகுமரி டிஎஸ்பி ஜெயச்சந்திரன், கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, அகஸ்தீஸ்வரம் தாசில்தார் ஆறுமுகம் தலைமையில்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் ஷேக் அப்துல் காதர், சுகாதார மேற்பார்வையாளர் பிரதீஷ் ஆகியோர் மேற்பார் வையில் நகராட்சி ஊழி யர்கள் அளவீடு செய்யப்பட்டு கடைகள் அகற்றப்பட்டது. பாதுகாப்பிற்காக ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.

நகராட்சி ஆணையர் பட்டுசாமி கூறும் போது:

காந்தி மண்டபம் முதல் காட்சிகோபுரம் வரை அய்யன் திருவள்ளுவர் சாலையில் நடைபாதையில் சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல முடியாத அளவுக்கு சுமார் 300 நடைபாதை கடைகள் மற்றும் உருட்டு வண்டி கடைகள் இருந்தது. மாவட்ட கலெக்டரின் உத்தரவின் பேரில் இந்த கடைகள் அகற்றப்பட்டுள்ளது. கடைகளை அகற்றுவது தொடர்பாக கடை உரிமையாளர்களுக்கு ஏற்கனவே அறிவிப்பு வழக்கப்பட்டதால் பெரும்பாலான கடை உரிமையாளர்கள் தாமாகவே கடையை அகற்றினர். சில கடைகள் அகற்றப்படவில்லை. அந்த கடைகளை போலீஸ் பாதுகாப்புடன் நகராட்சி ஊழியர்கள் கடையை அகற்றினர். அகற்றப்பட்ட இடத்தில் கடை நடத்த எந்த அனுமதியும் கிடையாது. அகற்றபட்ட இடத்தில் மீண்டும் கடை நடத்த முயன்றால் போலீசில் புகார் செய்யப்பட்டு வழக்கு பதிவு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# ரெடி ஃபார் லைஃப் ரிப்போர்ட் 2025' அறிக்கை பெண்கள் காப்பீடு செய்வதில் விழிப்புணர்வு அவசியம்

சென்னை, ஜூலை03

எச்.டி.எஃப்.சி லைஃப் நிறுவனத்தின் 'ரெடி ஃபார் லைஃப் ரிப்போர்ட் 2025' அறிக்கையானது பணிபுரியும் பெண்கள் குடும்ப வருமானத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதை சுட்டிகா ட்டுகிறது.

இருப்பினும், நிதி சார் தயார்நிலை என்று வரும்போது அவர்கள் போதுமான அளவு தயாராக இல்லை என்ற உண்மையையும் இது வெளிப்படுத்துகிறது. பெண்களின் நிதி சார் தீர்மானங்கள் பெரும்பாலும் சமூக பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டவை. 40 சதவீதம் பெண்கள் தங்கள் குழந்தையின் கல்வியையே முதன்மையான சேமிப்பு இலக்காக வைத்துள்ளனர். ஒரு குடும்பத்தின் நீண்டகால இலக்குகளை வடிவமைப்பதில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்பதை இது உறுதிசெய்கிறது .

எச்.டி.எஃப்.சி லைஃப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் & தலைமை வணிக அலுவலர், வினீத் அரோரா கூறுகையில்: நிதி பாதுகாப்பு மற்றும் பணி ஓய்வுக்கு திட்டமிடல், விழிப்புணர்வு இருந்தபோதிலும், டெர்ம் இன்ஷூரன்ஸ் வாங்க போதுமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.

இதேபோல், பணி ஓய்வைத் திட்டமிடுவதைப் பொறுத்தவரை விழிப்புணர்வு இருந்தாலும் கூட, 43 சதவீதம் பேர் மட்டுமே நிதி ரீதியாக மற்றவர்களை சார்ந்திருக்காமல் ஓய்வுக்குப் பிறகு தங்கள் வாழ்க்கையை வாழத் தயாராக இருப்பதாக உணர்கிறார்கள் . ஆயுள் காப்பீட்டு தீர்வுகள் வாழ்க்கையின் பல்வேறு சூழலில் எழும் தேவைகளை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளன. அதிகரித்து வரும் விழிப்புணர்வு மற்றும் தகவலறிந்து தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான பணிபுரியும் பெண்கள் நிதி ரீதியாக தயாராக இருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

## பாலக்கோடு அருகே

# 90 அடி ஆழ கிணற்றில் சிக்கிய டிரைவரும் நாயும் உயிருடன் மீட்பு



தருமபுரி ஜூலை 03

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு உழவன் கொட்டாய் பகுதியைச் சேர்ந்த முனியப்பன் லாரி டிரைவராக பணியாற்றி வருகிறார். இவரது விவசாயக் கிணற்றில் நாய் ஒன்று தவறி விழுந்தது. அதனை காப்பாற்றும் நோக்கில் சுமார் 90 அடி ஆழமுள்ள கிணற்றில் முனியப்பன் இறங்கினார். பின்னர் அவரால் மீண்டும் மேலே ஏற முடியாமல் கிணற்றுக்குள் சிக்கிக் கொண்டார். இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபட்டு, வலையின் மூலம் முனியப்பனையும் நாயையும் உயிருடன் மீட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## நாகர்கோவில் ரயில் நிலையத்தில்

# ரயிலில் சிக்கி ஓய்வு பெற்ற அரசு அதிகாரி சாவு

நாகர்கோவில், ஜூலை. 3

குளச்சல் பகுதியை சேர்ந்தவர் அழகப்பன் (86). பொதுப் பணித்துறையில் பொறியாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், தற்போது காஞ்சிபுரம் மாவட்டம் மடிப்பாக்கத்தில் உள்ள ராம்நகர் பகுதியில் தனது மகனுடன் வசித்து வந்தார். இந்த நிலையில் குலதெய்வ வழிபாட்டுக்காக அவர் தனது சகோதரர் மற்றும் உறவினர்களுடன் நேற்று முன் தின மாலை சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் வந்தார். அவர்கள் குளிர் சாதன முன்பதிவு பெட்டியில் பயணம் செய்தனர்.

நேற்று அதிகாலை 4 . 45 மணிக்கு நாகர்கோவில் சந்திப்பு ரயில் நிலையத்தை இந்த ரயில் வந்தடைந்தது. ரயிலில் இருந்து கீழே இறங்கிய அழகப்பன் கழிவறை செல்வதற்காக மீண்டும் ரயிலில் ஏறினார். அதே நேரத்தில் நாகர்கோவில் ரயில் நிலையத்திலிருந்து கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் புறப்பட்டது. இதனால் அவசரமாக அழகப்பன் ஓடும் ரயிலில் இருந்து கீழே இறங்கினார். அப்போது அவர் நிலை தடுமாறி கீழே விழுந்தார். ரயில் பெட்டிக்கும் நடைமேடைக்கும் இடையே அழகப்பன் சிக்கிக் கொண்டார். ரயில் இயங்கியபடி இருந்ததால் அவர் உடல் சிதைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அழகப்பருடன் சென்னையிலிருந்து வந்த அவரது சகோதரர் மற்றும் உறவினர்கள் கண் முன்னே சோக சம்பவம் நடந்தது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த ரயில்வே போலீசார் அழகப்பனின் உடலை கைப்பற்றி குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# இளையராஜா இசைத் தழுவலில் ஃபார்ம்லி வழங்கும் புதிய டிஜிட்டல் விளம்பரம்




சென்னை, ஜூலை03

இந்தியாவின் நொறுக்குத்தீனி பிராண்டான ஃபார்ம்லி , தனது "மக்கா ஷக்கா" பிராண்டிற்காக " புதிய டிஜிட்டல் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது. தமிழக இளைஞர்களின் வாழ்க்கை முறையை மையமாகக் கொண்ட இந்த விளம்பரம், இசைஞானி இளையராஜாவின் மெகா ஹிட் பாடலின் மறுவடிவத்தோடு உயிர்பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் பரபரப்பான தெருக்கள் மற்றும் மொட்டை மாடிகளில் நடப்பதாக இந்த விளம்பரம் படமாக்கப்பட்டுள்ளது. ஒரு இளைஞன் கடைசி 'மக்கா ஷக்கா' பாக்கெட்டை எடுப்பதில் தொடங்கும் இந்த வீடியோ, விறுவிறுப்பான 'பார்கூர்' சாகசத்துரத்தலாக மாறுகிறது. 'மைண்ட் யுவர் லாங்குவேஜ் (எம் . ஒய்.எல்). நிறுவனம் தயாரித்துள்ள இந்த ஆக்ஷன் காட்சிகள், தங்களுக்குப் பிடித்த நொறுக்குத்தீனிக்காக மக்கள் எந்த எல்லைக்கும் செல்வார்கள் என்பது போல் வடிவமைத்துள்ளனர். இந்த பிரச்சாரம் குறித்து ஃபார்ம்லி மார்க்கெட்டிங் தலைவர், அமன் குப்தா, "நுகர்வோர்கள் உள்ளூர் சுவையையும் ஆரோக்கியத்தையும் விரும்புகிறார்கள். முக்கிய சந்தையான தமிழ்நாட்டு வாடிக்கையாளர்களின் மனதிற்கு நெருக்கமாக இந்த விளம்பரம் இருக்க வேண்டும் என்று விரும்பினோம். இளையராஜாவின் அசல் இசையும், தெரு சாகசங்களும் இன்றைய இளைஞர்களை எளிதில் சென்றடையும்."என்று கூறினார்.

மேலும் எம்.ஒய்.எல் நிறுவனர் தீபன் ராமச்சந்திரன் கூறுகையில் "மக்கா ஷக்கா என்பது இளமைத் துடிப்பு நிறைந்த ஒரு தனி 'வைப்'. பிராண்ட் பெயரின் ஒலியிலிருந்தே இந்த யோசனை கிடைத்தது. ட்ரெண்டான பார்கூர் சாகசங்களையும், இளையராஜாவின் என்றும் அழியாத இசையையும்இணைத்துஇந்தஅற்புதமானவிளம்பரத்தை உருவாக்கியுள்ளோம். " இந்த விளம்பரம் 'ஜென் சீ' மற்றும் 'மில்லினியல்' இளைஞர்களைக் கவரும் வகையில், தயாரிப்பின் ஆரோக்கிய நன்மைகளையும் விளக்குகிறது என்றார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாயம் ஜமாபந்தியின் போது, வரப்பெற்ற மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், நிலுவையில் உள்ள மனுக்களின் விபரங்கள் மற்றும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர். ச.தினேஷ் குமார். பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி. வட்டாட்சியர் .ஜெகதீஸ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## சேலம் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில்

# 69வது முதலாம் ஆண்டு மாணவர்கள் வரவேற்பு விழா மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து



சேலம், ஜூலை 3

சேலம் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில் 69வது முதலாம் ஆண்டு மாணவர்கள் வரவேற்பு விழா மற்றும் சோனா கல்வி நிறுவனங்கள் – கிங் மேக்கர்ஸ் IAS அகாடமி இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்து நிகழ்ச்சி 02.07.2026 (வியாழக் கிழமை) காலை 10.35 மணியளவில் கல்லூரி வளாகத்தில் உள்ள ஸ்ரீ வள்ளியப்பா அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. தலைமை விருந்தினராக சேலம் TANGEDCO நிறுவனத்தின் மேற்பார்வைப் பொறியாளர் டாக்டர் N. குணவர்த்தினி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். கௌரவ விருந்தினராக சென்னை Ford India Limited நிறுவனத்தின் Manufacturing Engineering துறைத் தலைவர் திரு. டி. மனோகரன் அவர்கள் பங்கேற்று மாணவர்களிடம் சிறப்புரையாற்றினார். தலைவர் திரு. சி. வள்ளியப்பா அவர்கள் தனது தலைமையுரையில், கடந்த 69 ஆண்டுகளாக ஒழுக்கத்துடன் கூடிய தரமான தொழிற்கல்வியை இக்கல்லூரி வழங்கி வருவதாகக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் சோனா கல்வி நிறுவனங்கள் மற்றும் கிங் மேக்கர்ஸ் IAS அகாடமி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் மாணவர்கள் UPSC, TNPSC உள்ளிட்ட போட்டித் தேர்வுகளுக்கானதரமான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்களைப் பெறும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

மேலும், கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தங்களது கல்வி மற்றும் தொழில் அனுபவங்களை முதலாமாண்டு மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டு, அவர்களை ஊக்குவித்தனர். இவ்விழாவில் 2,000 க்கும் மேற்பட்ட முதலாமாண்டு மாணவ, மாணவியர்கள் தங்களது பெற்றோருடன் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

# பென்னாகரம் பள்ளத்தூர் இடையே புதிய பேருந்து வழித்தட நீட்டிப்பு சேவை

## த. வெ. க மாவட்டச் செயலாளர் சிவன் துவக்கி வைத்தார்



தருமபுரி ஜூலை 03

பென்னாகரம் பவளந்தூர் இடையே புதிய பேருந்து வழித்தட நீட்டிப்பிற்கான சேவையினை தவெக மேற்கு மாவட்ட செயலாளர் சிவன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பென்னாகரம் அருகே வட்டுவனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட பவளந்தூர் பகுதியில் 200 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இந்த பகுதியில் உள்ள பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் காலை நேரங்களில் பென்னாகரம், மாமரத்து பள்ளம், தருமபுரி உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு பேருந்து வசதி இல்லாததால் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. பவளந்தூர் பகுதிக்கு காலை மற்றும் மாலை வேளையில் பவளந்தூர் கிராமப் பகுதிக்குள் பேருந்து சேவை ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் நகரப் பேருந்து 26 சி ஒரு நாளுக்கு மூன்று முறை பவளந்தூர் ஊருக்குள் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பேருந்து சேவையை வரவேற்கும் வகையில் தவெக தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் சிவன் தலைமையில் கிராம மக்கள் பேருந்துக்கு பூஜை செய்து வழித்தட நீட்டிப்பை கொடியசைத்து தொடங்கி வைத்தர். உடன் பென்னாகரம் போக்குவரத்து கிளை பணிமனை மேலாளர் சுதாகர், பென்னாகரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ரஞ்சித் , மாவட்ட இணை செயலாளர் வீரமணி , முர்த்தி, பென்னாகரம் ஒன்றிய பொறுப்பாளர்கள் பன்னீர் ,கார்த்திக் ,கணேசன் , சந்தோஷ் மற்றும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் தங்கராஜ் , குமார் , விவாசய அணி பொறுப்பாளர் மணி , , கவின், மணி , கிருஷ்ணன், விமல்ராஜ் , பச்சியப்பன் மற்றும் பவளந்தூர் ஊர் கவுண்டர் மூர்த்தி, நாகராஜ், சின்ன கவுண்டர், தமிழ்குமரன் உள்ளிட்ட ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந

# குருந்தன்கோடு, குளச்சல் பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திடீர் ஆய்வு



நாகர்கோவில், ஜூலை. 3

குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம் மற்றும் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

முட்டம் ஊராட்சிக்குட்பட்ட கடியப்பட்டணம் கடற்கரை பகுதியில் உள்ள குப்பை கிடங்கு மற்றும் குப்பைகளை தரம் பிரிக்கும் கூடாரம் உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கீழக்கடியப்பட்டணம் பகுதியில் உள்ள மீனவ கூட்டுறவு சங்க நியாய விலை கடை திடீர் மேற்கொண்டு, குடும்ப அட்டை அரிசிதாரர்களுக்கும் வழங்கப்படும் அரிசி, பருப்பு, பாமாயில் உள்ளிட்டவைகள் சரியான அளவில் வழங்கப்படுகிறது என கேட்டறியப்பட்டதோடு இருப்பு வைக்கப்பட்டுள்ள ரேஷன் பொருட்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், மேலும் ரூ.2.37 இலட்சம் மதிப்பில் அங்கன்வாடி கட்டிடம் பழுது பார்க்கும் பணியினை நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து கடியப்பட்டினத்தில் சீரமைக்கப்பட்டு வரும் பயணிகள் நிழற்கூடை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பணிகளை விரைந்து முடித்திட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல் அரசு மருத்துவமனை திடீர் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ வசதிகள் குறித்தும், மருத்துவ பயனாளர்களை காத்திருக்க வைக்காமல் அவர்களின் நோயின் தன்மை அறிந்து உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள மருத்துவ கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ள ஆண்கள் பிரிவு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நோயாளிகளிடம் நலம் விசாரித்ததோடு காத்திருக்கும் அறையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சீரமைத்திட நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் உள் நோயாளிகளுக்கு வழங்கப்பட இருந்த மதிய உணவின் தரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குளச்சல் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ3.5 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் மருத்துவ கட்டிட பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் குளச்சல் அரசு நடுநிலைப்பள்ளிவளாகத்தில் ரூ.3.37 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறை பணிகளை விரைந்து முடித்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர பொதுப் பணித்துறை மற்றும் நகராட்சி பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து குளச்சல் பேருந்து நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, அங்கு செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தின் சமையலறை ஆய்வு மேற்கொண்டு, சுகாதாரத்துடன் பேண அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குளச்சல் உப்பளம் பகுதியில் செயல்பாட்டில் உள்ள நுண்உரம் செயலாக்கம் மற்றும் கழிவுகள் கையாளும் மையத்தினை ஆய்வு மேற்கொண்டு பணியில் உள்ள தூய்மை பணியாளர்களுக்கு தேவையான நோய்த் தடுப்பு உபகரணங்கள் வழங்குமாறு துறை அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடைபெற்ற ஆய்வில் குளச்சல் நகராட்சி ஆணையர் கோபாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிறிஸ்டோபர், ராஜேஷ், நாகராஜ், உதவி செயற்பொறியாளர் வாலி, நகராட்சி பொறியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## விளாத்திகுளம் அருகே

# ஸ்ரீ வீர முத்தம்மாள் தேவி அஷ்டவந்தன மகா கும்பாபிஷேக விழா



விளாத்திகுளம் ஜூலை 03.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள மாதலாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வீரமுத்தம்மாள்தேவி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நூற்றுக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது, இதற்கு முன்னதாக காலை 6 மணி அளவில் மகாஸ்ங்கல்பம், விக்னேஸ்வர பூஜை, புண்யசுக்தி மகாகணபதி ஹோமம், கோபூஜை,வேதிகா ச்சனை விசேஷ ஹோமம் நாடிசந்தனம்,பூர்ணாகுதி, தீபாதாரணைய தொடர்ந்து கடம் புறப்பாடுடன் கோவில் விமானத்தில் உள்ள கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது, அதனைத்தொடர்ந்து மகா தீபாதாரணை நடைபெற்றது. பின்னர் அருள்மிகு ஸ்ரீ வீரமுத்தம்மாள் சுவாமிக்கும் கோவில் வளாகத்தில் உள்ள இதர பரிவார தெய்வங்களுக்கும் பால்,தயிர், மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு அபிஷேகங்கள் மற்றும் அலங்காரதீபாதாரணை நடைபெற்றது கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் கோவில் நிர்வாகம் சார்பில் புனித நீர்தெளிக்கப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது.

# கோதையாற்றில் சுற்றி திரியும் முதலை

## சென்னை ஆராய்ச்சியாளர்களுடன் வனத்துறையினர் தீவிர கண்காணிப்பு

நாகர்கோவில், ஜூலை. 3

கோதையாற்றின் பகுதியான களியல், செங்கொடிகரை மற்றும் தோட்டாவரம் ஆகிய பகுதிகளில் கடந்த சில மாதங்களாக முதலை வந்து நடமாடியதாக தகவல் வெளியானது. குடிநீர் உறைகினற்றின் மீது முதலை அமர்ந்திருந்த காட்சிகள் வெளியாகி, அப்போது பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது. இதைத்தொடர்ந்து கடந்த 16ஆம் தேதி மீண்டும் ஆற்றின் நடுவே இருக்கும் அதே உறை கிணற்றின் மீது முதலை இருப்பதை பொதுமக்கள் பார்த்தனர். இது குறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்து அந்த முதலையை பிடிக்க வனத்துறையினர் அதிரடி நடவடிக்கை எடுத்தனர்.


முதலை நடமாட்டம் இருந்த உறை கிணறு அருகே இரும்பு கூண்டு அமைத்து கண்காணித்து வந்தனர். ஆனால் அந்த கூண்டில் முதலை சிக்கவில்லை. வனத்துறையினர் கூண்டு வைத்ததிலிருந்து அந்த பக்கம் முதலை வரவில்லை. அந்த முதலை கோதையற்றில் வேறு பகுதியை சென்று விட்டது. இதை தொடர்ந்து முதலையை பிடிக்க சென்னையில் இருந்து ஆராய்ச்சியாளர்கள் குழுவினர் குமரி மாவட்டம் வந்தனர்.

அவர்கள் கோதை ஆறு பகுதிக்கு சென்று வனத்துறை உதவியுடன் படகில் சென்று ஆய்வு மேற்கொண்டனர். முதலை தென்பட்ட உறை கிணறு பகுதியையும் அங்கு வைக்கப்பட்டிருந்த இரும்பு கூண்டையும் பார்வையிட்டனர்.

விவரங்களை சேகரித்த ஆராய்ச்சியாளர்கள் உறை கிணறு அருகே வைக்கப்பட்டுள்ள இரும்பு கூண்டை மூங்கில் மரங்கள் அடர்ந்த பகுதியில் தற்போது மாற்றி வைக்க அறிவுறுத்தி உள்ளனர். அதன்படி கூண்டு அங்கிருந்து மாற்றப்பட்டு மூங்கில் மரங்கள் நிறைந்த பகுதியில் வைக்கப்பட்டது. வனத்துறையினர் அந்த பகுதியை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள

# வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தாயுமானவர் திட்டம் மூலம் குடிமைப் பொருட்கள் வழங்கல்



கிருஷ்ணகிரி, ஜூலை 3

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளு க்கு தாயுமானவர் திட்டம் மூலம் 12.08.2025 முதல் இல்லங்களுக்கே நேரடியாக சென்று குடிமைப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் நியாயவிலைக்கடைகளில் உள்ள 29,287 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைகளுக்கு தாயுமானவர் திட்டத்தின் மூலம் வீடுகளுக்கு சென்று குடிமைப்பொருட்கள் வழங்க ஒரு நாள் குழு 155 மற்றும் இரண்டு நாள் குழு 154 என மொத்தம் 309 குழு அமைக்கப்பட்டு, 463 வாகனங்களை கொண்டு விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூலை 2026 ஆம் திங்களில் 04.07.2026 மற்றும் 06.07.2026 ஆகிய தேதிகளில் தாயுமானவர் திட்டத்தின் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.



ஜூலை: 03.07.2026 மதுரை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்களை,மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, அவர்கள் மதுரை விமான நிலையத்தில் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.




# மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் விலாவின் குருத்தெலும்பைப் பயன்படுத்தி ஒரே கட்ட அறுவை சிகிச்சையில் சிறுவனின் காது மறுசீரமைப்பு

மதுரை, ஜூலை 3

தென் தமிழகத்தில் முதன்முறையாக, மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் காது, மூக்கு, தொண்டை (ENT) அறுவை சிகிச்சை நிபுணர்கள், மைக்ரோடியா (Microtia) எனும் பிறவிக் குறைபாட்டுடன் பிறந்த 16 வயது சிறுவனின் காதை, அவனது விலா எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட குருத்தெ லும்பைப் பயன்படுத்தி வெற்றிகரமாக மறுசீரமைப்புசெய்துள்ளனர்.ஒருகுறிப்பிடத்தக்க சாதனையாக, பொதுவாக பல கட்டங்களாகச் செய்யப்படும் இந்த சிக்கலான 3D காது மறுசீரமைப்பு அறுவை சிகிச்சையை, மருத்துவக் குழுவினர் ஒரே கட்ட அறுவை சிகிச்சை அமர்வில் வெற்றிகரமாக செய்திருக்கின்றனர். வலியையும், மருத்துவமனையில் தங்கும் காலத்தையும் குறைத்து, விரைவான குணமடைதலுக்கு இதுவழிவகுத்துள்ளது.

இந்த மேம்பட்ட நுட்பத்திற்காக ஜப்பானில் சிறப்புப் பயிற்சி பெற்ற காது, மூக்கு, தொண்டை (ENT) சிகிச்சை துறையின் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் D.R நாகேஸ்வரன் அறுவைசிகிச்சை குழுவிற்கு தலைமை வகித்தார். இது குறித்துப் பேசிய டாக்டர் நாகேஸ்வரன், சுமார் 10,000 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு இயல்பான காது வளர்ச்சி இல்லாத (மைக்ரோடியா) பாதிப்பு ஏற்படுகிறது என்று கூறினார். குறிப்பிட்ட சமூகங்களில் நெருங்கிய இரத்த உறவுகளுக்குள் நடக்கும் திருமணங்கள் காரணமாக, தமிழ்நாட்டில் இதன் பாதிப்பு சற்று அதிகமாகவே உள்ளது. முகத்தில் தெரியும் இந்தக் குறைபாடால், பாதிக்கப்பட்ட குழந்தைகள் மீது உணர்வு ரீதியாகவும், மன ரீதியாகவும்பெரும் சுமையை சுமத்துகிறது. மனித உடலில் 12 இணை விலா எலும்புகள் இருந்தாலும், இந்த அறுவை சிகிச்சைக்குச் சில குருத்தெலும்புப் பகுதிகள் மட்டுமே தேவைப்படுகின்றன." என்று டாக்டர் நாகேஸ்வரன் விளக்கினார்.

"இந்த சிறுவனுக்கான சிகிச்சையில், நாங்கள் நான்கு விலா எலும்புகளிலிருந்து மட்டுமே குருத்தெலும்புகளை எடுத்தோம். இந்த அறுவை சிகிச்சையினால் குருத்தெலும்பு எடுக்கப்பட்ட இடத்தில் மிகச்சிறிய தழும்பே ஏற்படும்; மேலும் இது விலா எலும்புக்கூட்டின் வலிமையையோ அல்லது நிலைத்தன்மையையோ பாதிக்காது," என்று அவர் மேலும் கூறினார்.

மைக்ரோடியாவுடன் தொடர்புடைய கேட்கும் திறன் குறைபாட்டை ஆரம்பகாலத்திலே கவனித்தால், பெரும்பாலும் சரி செய்ய முடியும் என்பதையும் டாக்டர் நாகேஸ்வரன் வலியுறுத்தினார்.

"காக்லியர் இம்ப்ளான்டேஷன் மற்றும் பிற செவித்திறன் மீட்பு வழிமுறைகள் உட்பட, கேட்கும் திறனை மீட்டெடுப்பதில் மிகப்பெரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை, பொருத்தமுள்ளதாக கருதப்படும் குழந்தைகளுக்குச் செவிக்திறனை மேம்படுத்துவதில் சிறந பலன்களை அளிக்கும்."என்று கூறினார்.

இந்தச் சாதனையின் முக்கியத்துவத்தை விளக்கிய மருத்துவ நிர்வாகி டாக்டர் B. கண்ணன். அறுவை சிகிச்சை நிபுணத்துவத்தைப் பற்றி நாங்கள் "எமது மருத்துவர்கள்குழுவின்பெருமிதம் கொள்கிறோம். தென் தமிழகத்தில் இவ்வளவு சிக்கலான 3D காது மறுசீரமைப்பு சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது என்றார்.

# தேனி மாவட்டத்தில் விக்சித் பாரத் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத இயக்கம் திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகள்



தேனி, ஜூலை 3

தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், இலட்சுமிபுரம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் விக்சித் பாரத் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத இயக்கம் திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் க.சபரி ஐங்கரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இத்திட்டமானது மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை நாட்களை 125 நாட்களாக மாற்றி புதிதாக அமைக்கப்பட்ட விக்சித் பாரத் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்கம் துவக்கப்பட்டு முதல் இத்திட்டம் ஊராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 318 பணிகள் உருவாக்கப்பட்டு, ஊராட்சியின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை அப்பகுதி மக்களே தேர்வு செய்து, பணிகளை முடித்து தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக திகழும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு 60% மத்திய அரசு நிதியும், 40% மாநில அரசு நிதியும் பங்களிப்பு நிதியாக வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2047ஆம் ஆண்டிற்குள் அனைத்து ஊராட்சிகளும் முழுமையான வளர்ச்சிப் பெற்று வளர்ந்த பாரதமாக அமைந்திட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முழுமையான நோக்கமாகும். மேலும், இத்திட்டத்தில் பணிக்காலங்களில் விவசாயப் பணிகள் பாதிக்காத வகையில் 60 நாட்கள் விடுமுறை காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயப் பணிகள் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது. அதேபோல், ஊராட்சிப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள் முழுக்க முழுக்க அப்பகுதி மக்களை வைத்து செயல்படுத்தப்படும். ஒப்பந்ததாரர்களின் பணி முற்றிலும் தடுக்கப்படுகிறது. இதனால் கிராமப் பகுதிகளில் உள்ள தனி நபர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்திட்டம் மிகப்ப யனுள்ளதாக இருப்பதுடன் ஊராட்சியின் வளர்ச்சியையும் முழுமை பெறும் திட்டமாக அமைந்திட உள்ளது என தெரிவித்தார்கள்.

## மார்த்தாண்டம் அருகே

# பிரதமர் மோடி பெயரில் பெண்ணிடம் ரூ.8 லட்சம் மோசடி

## நகைக்கடை உரிமையாளர்கள் 2 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூலை. 3

மார்த்தாண்டம் அருகே திக்குறிச்சி பகுதியை சேர்ந்தவர் தாமஸ் மகன் ஷாஜி (39). இவர் ராணுவ வீரராக உள்ளார். இந்த நிலையில் ஷாஜியின் தந்தை தாமசுக்கு வாகன விபத்து இழப்பீடாக அரசு தரப்பில் இருந்து ரூபாய் 8 லட்சம் ஷாஜியின் தாய் மரிய சாந்தா வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

இதை அறிந்த அந்தப் பகுதியில் நகை கடை வைத்துள்ள சுதர்சிங் (42) என்பவர் பணத்தை மோசடி செய்ய திட்டமிட்டார். சுதர்சிங் ஷாஜியின் குடும்பத்திற்கு நன்கு தெரிந்தவர் ஆவார். பின்னர் மரிய சாந்தாவிடம் உங்களது கணவருக்கு விபத்து இழப்பீடாக வந்துள்ள பணத்தை வங்கி கணக்கில் வைத்திருந்தால் அதனை பிரதமர் மோடி எடுத்து விடுவார் என்று கூறியதாக தெரிகிறது.

இதனை கேட்ட மரிய சாந்தா தனக்கு இழப்பீடாக வந்த பணம் பறிபோய் விடுமோ? என்றபயதத்தில் ரூ.6 லட்சத்தை சுதர் சிங்கிடம் கொடுத்துள்ளார். பின்னர் தான் கேட்கும்போது பணத்தை திருப்பி தரவேண்டும் கூறியுள்ளார். மேலும் உள்ள 2 லட்சத்தை மற்றொரு நகை கடை உரிமையாளரானசுஜன்(35) என்பவருக்கு கொடுக்கும்படி சுதர்சிங் கூறியுள்ளார். மரிய சார்ந்தவும் ரூ. 2 லட்சத்தை அவர் கூறியபடியே கொடுத்துள்ளார்.

பணம் கொடுத்ததை தனது மகன் ஷாஜி இடம் மூதாட்டி சொல்லிவைத்திருந்தார். இதை அடுத்து சில நாட்களுக்குப் பின்னர் மரிய சாந்தா உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து மருத்துவ சிகிச்சைக்காக சுதர் சிங்கிடம் தனது தாய் கொடுத்த பணத்தை ஷாஜி கேட்டுள்ளார். ஆனால் பணத்தை தராமல் இழுத்து அடித்து வந்துள்ளார். தான் ஏமாற்றப்படுவதை உணர்ந்த ஷாஜி இது குறித்து மார்த்தாண்டம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன் பேரில் போலீசார் பெண்ணிடம் பிரதமர் மோடியின் பெயரை கூறி, அச்சுறுத்தி ரூ. 8 லட்சத்தை மோசடி செய்த நகைக்கடை உரிமையாளர்கள் சுதர்சிங் மற்றும் சுஜன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குழந்தைகள் இல்ல குழந்தைகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் முகாம்; கலெக்டர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில்,ஜூலை. 3

குமரி மாவட்ட குழந்தைகள் இல்லங்களில் தங்கி கல்வி பயிலும் குழந்தைகளுக்கான சிறப்பு ஆவணங்கள் வழங்கும் முகாம் நடைபெற்றது. மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட ஆட்சியர்அலுவலகநாஞ்சில்கூட்டரங்கில் நடைபெற்ற இந்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் துவக்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது:

குழந்தைகள் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டும், அவர்களின் கல்வி, உயர்கல்வி மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகளை எவ்வித தடையுமின்றி எளிதாகப் பெறுவதற்கும் இந்த சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் இல்லக் குழந்தைகளுக்குத் தேவையான முக்கிய அடிப்படை ஆவணங்களை உடனுக்குடன் பெற்றுத் தருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக பிறப்புச் சான்றிதழ் குழந்தைகளின் அடிப்படை வயது மற்றும் கல்வி சேர்க்கைக்கான முக்கிய ஆவணமாகும். புதிய ஆதார் பதிவு செய்தல் மற்றும் விடுபட்ட திருத்தங்களை மேற்கொள்ளுதல். சாதிச்சான்றிதழ் கல்வி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பில் உரிய சலுகைகளைப் பெறுவதற்கான சான்றிதழ். அரசின் கல்வி உதவித்தொகை மற்றும் இதரநிதியுதவிகள் நேரடியாகக் குழந்தைகளைச் சென்றடைவதற்கானபுதிய வங்கிகணக்குகள்தொடங்குதல் உள்ளிட்ட சேவைகள் உடனடியாக வழங்கப்படும். இதன் மூலம் மாவட்டத்திலுள்ள அனைத்துக் குழந்தைகள் இல்லங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர்கள் எவ்வித சிரமமுமின்றி தங்களுக்குரிய அடிப்படை அரசு ஆவணங்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எனகூறினார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஒரு குழந்தைக்கு வங்கி இணைப்புக்கான ஆணையினை வழங்கினார்.

முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர்எஸ்.காளீஸ்வரி,மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் சகிலா பானு, வங்கி மேலாளர்கள், வருவாய் துறை அலுவலர்கள் குழந்தைகள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# காவிரி டெல்டாவை பாலைவனமாக்கும் மேகதாது அணைத்திட்டத்தை தடுக்க வலியுறுத்தி அன்புமணி ராமதாஸ் விழிப்புணர்வு பயணம்




சேலம், ஜூலை 3

தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் விவசாய பாசனத்திற்கு ஆதாரமாகவும், 25 மாவட்டமக்களின்குடிநீருக்கு ஆதார மாகவும் காவிரி ஆறு உள்ளது. கர்நாடக அரசு தற்போது அதன் குறுக்கே மேகதாது அணையை கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. கர்நாடக அரசு மேகதாது அணையை கட்டினால் தமிழகத் திற்கு நீர் வருவது தடுக்கப்பட்டு காவிரி பாசன மாவட்டங்கள் பாலைவனம் ஆகிவிடும். அப்படி ஒரு நிலைமை ஏற்படுவதை தடுக்க காவிரியில் மேகதாது அணை கட்டும் சதித் திட்டத்தை முறியடிக்க வேண்டும். குடகு மலையில் உருவாகும் காவிரி கர்நாடகத் திலும் மற்றும் தமிழகத்திலும் பாய்ந்து பின் கடலில் கலக்கிறது. தமிழகத்தினுள் நுழைவதற்கு முன்பாக கர்நாடக எல்லைப் பகுதியில் உள்ள மேகதாது என்ற இடத்தில்காவிரியும் அதன்துணை ஆறான அமராவதி ஆறும் கலக்கும் இடத்தில் காங்கிரிட் அணையை கட்ட கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது. கர்நாடக அரசு தேவையான நீரினை அணைகளில் தேக்கி வைத்து கொண்டி. ருந்தும் கூடுதலாக மேகதாது அணையும் கட்டப்பட்டால் மொத்த நீரையும் கர்நாடகத் திற்கு மட்டுமே பயன் படுத்துவார்கள். இதனால் தமிழகத்திற்கு தண்ணீர் வராமல் தமிழகத்தின் பாசன மாவட்டங்களில் விவசாயம் பொய்த்து தமிழகம் பாலைவனம் ஆகிவிடும். காவிரியில் டெல்டா மாவட்டங்கள் தவிர சென்னை,காஞ்சிபுரம், வேலூர், மதுரை, திண்டுக்கல்,ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட 25 மாவட்டங்களில் உள்ள மக்களின் குடிநீர் ஆதாரம் மேகதாது அணை கட்டப்பட்டால் பெரும்பாலான பகுதிகள் பஞ்சம் ஏற்பட்டு குடிநீருக்கு தவிக்கும் நிலை ஏற்படும்.

காவிரி குண்டாறு இணைப்பு திட்டம், மேட்டூர் உபரி நீர் திட்டம், தர்மபுரி காவிரி உபரி நீர் திட்டம் மற்றும் அரியலூர் சோழர் பாசன திட்டம் போன்ற அனைத்து திட்டங்களும் முடங்கி அந்தந்த பகுதியில் வாழும் தமிழக மக்களுக்கு குடிநீர் பஞ்சம் ஏற்படும். காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் உச்சநீதிமன்றம் பலமுறை ஆணையிட்டும் கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய தண்ணீரை தருவதில்லை. கர்நாடகத்தில் அணைகளில் உள்ள உபரி நீரை மட்டுமே அவ்வப்போது தமிழகத்திற்கு திறந்து விடுகிறது. மேகதாது அணை கட்டப்பட்டால் சுமார் 5000 ஹெக்டர் பரப்பளவில் காவிரி வனவிலங்கு சரணாலய நிலப்பகுதி நீரில் மூழ்கும். யானைகள், புலிகள், பறவைகள் வாழிடம் அழிந்து போகும் மேலும் பல மலைவாழ் கிராமங்களும் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. இது ஒரு மாபெரும் சூழலியல் பேரழிவாக முடியும். எனவே மேகதாது அணை கட்டுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தமிழகத்துக்கு எதிரான சதித்திட்டத்தை முறியடிப்பது குறித்து மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்த பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஜூலை 1ஆம் தேதி அன்று பிலிகுண்டுலுவில் இருந்து விழிப்புணர்வு பரப்புரையை தொடங்கி ஜூலை இரண்டாம் நாள் சேலத்தில்

இருந்து மீண்டும் பரப்புரையை ஆரம்பித்து ஜூலை நான்காம் நாள் பூம்புகாரில் நிறைவு செய்கிறார். எனவே மேகதாது அணையை தடுத்து நிறுத்து வதற்கான அறப்போராட்டத்தில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் தமிழ்நாடு உழவர் பேரியக்கம் சார்பில் அழைக்கிறார்.

# ஈக்காடு ஏரியில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிரை ஜேசிபி வைத்து அழித்த பொது பணித்துறை அதிகாரிகளுக்கு விவசாயிகள் எதிர்ப்பு

## அறுவடை செய்யும் வரை நேரம் கொடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை



திருவள்ளூர், ஜூலை 3

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் அடுத்த ஈக்காடு கிராமத்தில் சுமார் 356 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரிய ஏரியை 40 ஆண்டுகளாக 50க்கும் மேற்பட்ட நபர்கள் ஆக்கிரமித்து செங்கல் சூளை மற்றும் விவசாயம் செய்து வந்தனர் இந்த நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு திருவள்ளூர் வட்டாட்சியர் தலைமையிலான வருவாய்த்துறையினர் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் ஈடுபட்டதுடன் மேலும் ஏரியை ஆக்கிரமித்து கிராமத்தினர் யாரும் பயிர் செய்யக் கூடாது எனவும் ஏரியை தூர்வாரி அதிகளவிலான நீரினை சேமித்து வைக்க அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்தனர் இந்த நிலையில் நீரை சேமித்து வைப்பதற்கு கரைகளை பலப்படுத்தும் உள்ளிட்ட எந்த பணிகளையும் பொதுப்பணித்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக செய்யாத சூழலில் ஈக்காடு கிராமத்தைச் சேர்ந்த பலர் மீண்டும் ஏரியில் விவசாயம் செய்யத் தொடங்கி பெருமளவு நெல்பயிரினை பயிரிட்டு இருப்பதை அறிந்த பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஜேசிபியுடன் வந்து விவசாயிகள் பயிரிட்டு இருந்த நெற்பயிரில் ஜேசிபி விட்டு பயிரை அழிக்கும் பணியில் ஈடுபட்டனர்

இதனை அறிந்த அப்பகுதி மக்கள் பயிரிட்டுள்ள நெற்பயிரை ஜேசிபி வைத்து அகற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியது

இதனைத் தொடர்ந்து பொதுப்பணித் துறை அதிகாரிகளுடன் விவசாயிகள் நடத்திய பேச்சு வார்த்தையில் பயிரிடப்பட்டுள்ள நெல்பயிரை அறுவடை செய்யும் வரை நேரம் கொடுக்குமாறும் அதற்குப் பின்னர் விவசாயம் செய்ய மாட்டோம் எனவும் கோரிக்கை வைத்ததை தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கையை பொதுப்பணித்துறை அலுவலகத்தில் மனுவாக கொடுக்குமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகளும் அறிவுறுத்தினர், இதனால் ஏரியில் விவசாயம் செய்திருந்த விவசாயிகள் சமாதானம் அடைந்தனர்



### தென்தாமரைகுளத்தில்

# த.வெ.க சார்பில் நலத்திட்ட உதவி வழங்கும் விழா

தென்தாமரைகுளம்., ஜூலை. 3

தென்தாமரைகுளத்தில் த.வெ.க சார்பில் நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடந்து.

தமிழக முதல்வரும் தமிழக வெற்றி கழக தலைவருமான ஜோசப் விஜய் ன் 52வது பிறந்தநாளை முன்னிட்டு தென்தாமரைகுளம் அரசு தொடக்கப்பள்ளி அருகே வைத்து தென்தாமரைகுளம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 52 பேருக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அகஸ்தீஸ்வரம் ஒன்றிய த. வெ. க செயலாளர் எட்வின் தலைமை தாங்கினார்.பேரூர் செயலாளர் ஸ்டான்லி ரூபஸ், முன்னிலை வகித்தார்.ஒன்றிய பொருளாளர் மணிகண்டன் அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட நிர்வாகி அருள் ஞானபெல் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிக்சன் 52 பேருக்கு மரக்கன்றுகளை வழங்கினார். தாமரை முருகன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். முடிவில் பேரூர் இணைசெயலாளர் சகாய ஷைனி நன்றியுரையாற்றினார். விழாவில் ஜேம்ஸ், பெனிட், ஜெபராஜ், காலேப் பிரவின் உட்பட கட்சிநிர்வாகிகள், பொதுமக்கள் பலர்கலந்துகொண்டனர்.

# நாடாளுமன்ற நடைமுறைகள் குறித்து இளைஞர்களுக்கு விளக்கம்

## ஈரோடு ஆட்சித்தலைவர் கந்தசாமி துவக்கி வைத்தார்




ஈரோடு ஜூலை 3

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், இளைஞர்களுக்கு இந்திய நாடாளுமன்ற நடைமுறைகள், சட்டங்கள் இயற்றப்படும் விதம் மற்றும் ஜனநாயகத்தின் செயல்பாடுகள் குறித்து நேரடி அனுபவம் வழங்கும் வகையில், "யங் இந்தியன்ஸ் பார்லிமெண்ட் 2026" என்ற இரண்டு நாட்கள் மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடந்தது.

அப்போது அவர் பேசியதாவது ஜனநாயகத்தின் அடிப்படை கொள்கைகளை இளம் தலைமுறையினர் ஆழமாகப் புரிந்துகொள்வதற்கும், நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சட்டமியற்றும் செயல்முறைகள் குறித்து நடைமுறை அறிவை இளைஞர்கள் பெறுவதற்கும் இதுபோன்ற மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சிகள் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. மேலும், மாணவர்கள் தங்களது கருத்துகளை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்தி, தலைமைத்துவத் திறன், விவாதத் திறன். பொறுப்புணர்வு மற்றும் சமூக அக்கறையை வளர்த்துக்கொள்ளவும் இந்த நிகழ்ச்சி சிறந்த தளமாக அமைகிறது.

மாணவ, மாணவியர்கள் பாடப்புத்தகங்களை மட்டுமின்றி, வாழ்விற்கு வழிகாட்டும் நூல்களையும் தொடர்ந்து படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். எந்தத் துறையில் பணியாற்றினாலும், வாழ்க்கை நெறிகளை உணர்த்தும் திருக்குறளும், ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புகளை விளக்கும் நூல்களும் இளைஞர்கள் கண்டிப்பாக படிக்க வேண்டும். திருக்குறள் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும். சமுதாயத்தில் எவ்வாறு ஒற்றுமையுடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டும்.வாழ்க்கையில்எதற்குமுன்னுரிமை அளிக்க வேண்டும். இலக்கு எவ்வாறு அமைந்திருக்கவேண்டும்என்பவற்றை உணர்ந்தக் கூடிய நூலாக திருக்குறள் அமைகிறது.

அதேபோன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்து நாம் ஒவ்வொரு வரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், பிரச்சினைகளை அணுகும் விதம். மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரங்கள். பொறுப்புகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து வயது வரம்பின்றி அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். எனவே, இளைஞர்கள் இது போன்ற நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது அறிவுத்திறனை மேம்படுத்தி, வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் . இவ்வாறு அவர் கூறினார். இதில் ஆனந்த் மோகன் எம் எல் ஏ இந்திய தொழிலக கூட்டமைப்பின் தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் சத்திய மூர்த்தி, யு.ஆர்.சி.தேவராஜன், தலைவர் யங் இந்தியன்ஸ் நாடாளுமன்றம் (ஈரோடு தலைவர்) ஓம்சரவணா மற்றும், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### தூத்துக்குடி புதிய பேருந்து நிலையம் பகுதியில்

# சட்டவிரோதமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 6 நபர்கள் கைது

தூத்துக்குடி, ஜூலை 3

தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய ஆய்வாளர் வேல்ராஜ் வழக்கு பதிவு செய்துசட்டவிரோதகஞ்சாவிற்பனையில் ஈடுபட்ட தூத்துக்குடி போல்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர்களான ராமர் மகன் பாலசுப்பிரமணியன் (27), கணேசன் மகன் பிரவீன் (25), ஸ்டேட் பாங்க் காலனியை சேர்ந்த சித்திரைச் செல்வம் மகன் தனராஜ் (30), நேதாஜி நகரை சேர்ந்த சண்முகவேல் மகன் ஆனந்த் (28), சாத்தூர் பகுதியை சேர்ந்தவர்களான அழகர்சாமி மகன் மீனாட்சிசுந்தரம் (28) மற்றும் சம்சுதீன் மகன் சையத் அஃப்ரலி (26) ஆகிய 6 பேர்களை கைது செய்து அவரிடமிருந்து 6½ கிலோ கஞ்சாவையும் பறிமுதல் செய்தார்.

### பாளையக்காட்டில்

# தார் சாலை அமைக்கும் பணி துவக்க விழா



திருப்பூர், ஜூலை 03

திருப்பூர் மாநகராட்சி 34 வது வார்டில் மாநகராட்சி பொது நிதி 2025-2026 யின் கீழ் பாளையக்காடு மாரியம்மன் கோவில் சாலையில் தார் சாலை மறு சீரமைப்பு பணிக்காக ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் பணி துவக்க விழாவினை திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் பால சுப்பிரமணியம்.திமுக வாலி பாளையம் பகுதி செயலாளர் 34 வது வார்டு கவுன்சிலர் பி ஆர் செந்தில்குமார்,34 வார்டு செயலாளர் பி ஆர் இளங்கோ, ஆகியோர் துவக்கி வைத்தனர் இந்த நிகழ்வில் இறுதி செயற்பொறியாளர் ராம் மோகன் குமார் இளநிலை பொறியாளர் சுப்பையா மற்றும் ஊர் பொதுமக்கள் பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.




# இயற்கை மருத்துவம் பற்றிய கருத்தரங்கம்

தென்தாமரைகுளம்., ஜூலை. 3

களியக்காவிளை நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கிள்ளியூர் பஞ்சாயத்து உறுப்பினர்கள் இணைந்து நடத்திய இயற்கை மருத்துவம் பற்றிய கருத்தரங்கம் புனித அந்தோணியார் சமூக நலக்கூடத்தில் வைத்து ஆரம்பமானது. அந்தக் கூட்டத்திற்கு பெருமாங்குழி, கருங்கல் மற்றும் துண்டத்துவிளை மக்கள் சுமார் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். துவக்கப் பாடலுடன் கூட்டமானது ஆரம்பமானது. அக் கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை வழக்கறிஞர் அருள்தாஸ் வரவேற்று பேசினார்கள்.

குழித்துறை இயற்கை முழுநல வாழ்வு மையத்தில் பணிபுரியும் மருவத்துவர் ஏஞ்சலின் ஆஷா தலைமைத் தாங்கி இயற்கை உணவு, உடல்நலம், தியானம் குறித்து மருத்துவ உரையாற்றினார்கள். கிள்ளியூர் ஆயுர்வேத தலைமை மருத்துவர் வின்சி கருத்துரை வழங்கினார்கள். இதனை சமூக பணி துறை மாணவர் ஆரோக்கியசாமி ஏற்பாடு செய்திருந்தார்.

# 9 வயது சிறுமிக்கு செயற்கை கண் பொருத்தி மறுவாழ்வு

## தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சாதனை



தூத்துக்குடி ஜூலை 3

தூத்துக்குடி அரசினர் மருத்துவக் கல்லூரிமருத்துவமனையில்,பிறவியிலேயே இடது கண் குறைபாட்டுடன் பிறந்த 9 வயது சிறுமிக்கு அரிய வகை கண் குழி சீரமைப்பு மற்றும் செயற்கை கண் பொருத்தும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான செய்தியாளர் சந்திப்பு மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. பிறவிக்குறைபாட்டால் அவதிப்பட்ட சிறுமி கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், ஆரல்வாய்மொழி கிராமத்தில் வசித்து வரும் பொன்னு என்பவரின் 9 வயது மகள் முத்துசெல்வி. அச்சிறுமிக்குப் பிறவியிலேயே இடது கண் இல்லாததால், அவதிப்பட்டு வந்தார். கடந்த 20.06.2026 அன்று, தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. எபனேசர் ஜோயல் குமார், துணை முதல்வர் மரு. கலைவாணி, மற்றும் மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. பத்மநாபன் ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் இந்த அரிய அறுவை சிகிச்சை நடைபெற்றது.கண் பிரிவு துறைத் தலைவர் மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்க திட்ட மேலாளருமான மரு. ம. ரீட்டா ஹெப்சிராணி தலைமையில், பின்வரும் மருத்துவக் குழுவினர் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்:

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் மரு. அருணா தேவி மயக்கவியல் மருத்துவர்கள் மரு. ஸ்ரீராம், மரு. அஜய் சந்தோஷ் டேவிட் உதவி மருத்துவர்கள் மரு. ஜெயந்தி, மரு. வின்சா, மரு. திவ்யா செவிலியர்கள்: சுரேகா, ரத்னா இந்த மருத்துவக் குழுவினர் இணைந்து சிறுமிக்குக் கண் குழி சீரமைப்பு அறுவை சிகிச்சை மற்றும் செயற்கை கண் பொருத்தும் அறுவை சிகிச்சையை மிக வெற்றிகரமாகச் செய்து முடித்தனர். செய்தியாளர் சந்திப்பில் பெற்றோர் நெகிழ்ச்சி,

10 மணியளவில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இதில் தங்களுக்குக் கிடைத்த முழுமையான கண் சிகிச்சை மற்றும் செயற்கை கண் பொருத்தப்பட்ட விவரங்கள் குறித்துச் சிறுமி முத்துசெல்வியும் அவரது தாயாரும் செய்தியாளர்களிடம் விவரித்தனர். அப்போது, தங்களது குழந்தைக்கு அதிநவீனமுறையில்செயற்கைகண்பொருத்தி, புதிய வாழ்வையும் நம்பிக்கையையும் தந்து உதவிய தூத்துக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அனைவருக்கும், ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ சேவை கிடைக்கத் திறம்படச் செயல்பட்டு வரும் தமிழக அரசுக்கும் தங்களது மிகுந்த மகிழ்ச்சியையும், நெஞ்சார்ந்த நன்றியையும் கண்ணீர் மல்கத் தெரிவித்துக் கொண்டனர்.

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில்.. அர்ப்பணிப்புடன் இயங்கும் கண் சிகிச்சை பிரிவு தூத்துக்குடி அரசு மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவில் தினமும் சுமார் 200க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், மாதந்தோறும் 200க்கும் மேற்பட்ட கண் புரை அறுவை சிகிச்சைகளும் (*Cataract Surgery*), கண் நீர் அழுத்த நோய் (*Glaucoma*), மாறுகண் (*Squint*), கருவிழி மாற்று அறுவை சிகிச்சை (*Keratoplasty*) போன்ற பல்வேறு அதிநவீன சிகிச்சைகளும் இங்கு முற்றிலும் இலவசமாக, அர்ப்பணிப்பு உணர்வோடு வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தங்களுக்கு ஏற்படும் கண் தொடர்பான அனைத்துப் பாதிப்புகளுக்கும் எங்களைப் போன்ற அரசு மருத்துவர்களை அணுகிப் பயன்பெறுமாறு மருத்துவமனை நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது

### மார்த்தாண்டத்தில்

# 3 வயது சிறுமியிடம் நகை திருட்டு

மார்த்தாண்டம், ஜூலை. 3

மார்த்தாண்டம் அருகே உள்ள தேவிகோடு பகுதியை சேர்ந்தவர் ரவீந்திரன் மனைவி சரஸ்வதி (56). இவர் தனது மூன்று வயது பேத்தியுடன் களியக்காவிளையில் இருந்து மார்த்தாண்டத்திற்குஅரசுபஸ்ஸில்வந்தார்.மார்த்தாண்டம் மேம்பாலம் பகுதியில் பேருந்தை விட்டு இறங்கிய சரஸ்வதி அங்கிருந்து தக்கலை குமாரகோவில் செல்வதற்காக நின்று கொண்டிருந்தார்.

அப்போது அங்கு நின்ற பெண் ஒருவர் சரஸ்வதியின் பேத்தியை கையில் வாங்கி வைத்திருந்தார். அதன் பிறகு சரஸ்வதி பேத்தியை வாங்கிக்கொண்டு குமாரகோவில் செல்லும் மினி பஸ்சில் ஏறினார். அப்போது பேத்தியின் கழுத்தில் இருந்த ஒரு பவுன் தங்கச் சங்கிலி மாயமாகி இருந்ததை பார்த்து அவர் அதிர்ச்சி அடைந்தார்.

உடனடியாக மார்த்தாண்டம் போலீசில் சரஸ்வதி புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தாலும் குற்றவாளிகள் குறித்து எந்த தடயமும் கிடைக்கவில்லை. இது குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

சமீபகாலமாக குமரி மாவட்டத்தில் டிப்டாப் உடையில் வரும் பெண்கள் பஸ்களில் பயணிகளிடம் கைவரிசை காட்டி நகைகளை பறித்து செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்புதக்கலைபகுதியில்பஸ்ஸில்சென்ற2பெண்களிடம் 8 பவுன் தங்க நகைகள் அபேஸ் செய்யப்பட்ட சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத் தகுந்ததாகும்.



### தூத்துக்குடி மாவட்ட

# புதிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக கருப்பண ராஜவேல் பொறுப்பேற்பு

தூத்துக்குடி, ஜூலை 3

தூத்துக்குடி மாவட்ட புதிய செய்தி மக்கள் தொடர்பு அலுவலராகபெ.சா.கருப்பணராஜவேல்பொறுப்பேற்றுக் கொண்டார். தூத்துக்குடி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புஅலுவலராகபணியாற்றிவந்தநவீன்பாண்டியன் சமீபத்தில்பணியிடமாற்றம்செய்யப்பட்டார். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பதவியேற்பு நிகழ்வுநடைபெற்றது. இதில் பெ.சா. கருப்பணராஜவேல் கோப்புகளில் கையெழுத்திட்டுத் தனது புதிய பொறுப்பினை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்.



### சேலத்தில்

# அன்பின் கரங்கள் மாற்றுத்திறனாளி அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு துவக்க விழா

சேலம், ஜூலை 3

சேலத்தில் அன்பின் கரங்கள் மாற்றுத்திறனாளி அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டு துவக்க விழா. ரோட்டரி கிளப் ஆப் சேலம் டிவைன் ஹாட்ஸ். ஜென்னிஸ் எஜூகேஷனல் தொண்டு நிறுவன அறக்கட்டளை மற்றும் பிரீத்தம் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நான்கு ரோடு அன்னை இல்லத்தில்நடைபெற்றது.டாக்டர்ஸ்டீபன்ராஜ்ரியான்ஸ் டூத் பிலேஸ் மருத்துவமனை சார்பாக தமிழ்நாட்டில் முதல் முதலாக ஏ ஐ நவீன மிஷின் ராபர்ட் மூலமாக இலவச பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் தேசிய சர்வதேச அளவில் வெற்றி பெற்ற மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களை கௌரவத்து கேடயங்கள் வழங்கப்பட்டது.மற்றும் பத்திரிக்கை நிருபர்களை கௌரவித்து கேடயங்கள் வழங்கப்பட்ட து. மற்றும் தூய்மை பணியாளர்களை கௌரவித்து மதிய உணவு வழங்கப்பட்டது.100 மாற்றுத்திறனாளிகளுக்கு 5 கிலோ அரிசி பிரீத்தம் மருத்துவமனை சார்பாக வழங்கப்பட்டது. டாக்டர் ராஜேஷ் பவுண்டேஷன் சார்பாக வீல்சேர் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டது .

அரவிந்த் கண் மருத்துவமனை. பிரீத்தம் மருத்துவமனை. ரியான்ஸ்டூத் பிலேஸ் சார்பாக இலவச மருத்துவ பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கே எம் அஸ்வினி அஸ்தம்பட்டி சரகம் காவல் நிலையம் உதவி ஆணையாளர். பி. செண்பக வல்லி சேலம் மாவட்டம் மாற்றுத்திறனாளி நல் அலுவலர் . ஏ கே எஸ் டாக்டர்.ராஜேஷ் டாக்டர் . ராஜேஷ் பவுண்டேஷன் அறக்கட்டளை. ரொட்டேரியன் மணிகண்டன் தலைவர் ரோட்டரி கிளப் சேலம் டிவைன் ஹாட்ஸ் மற்றும் தலைவர் அன்பின் கரங்கள் மாற்றுத்திறனாளி அறக்கட்டளை. டாக்டர் கர்லின் எபி தலைவர் ஜென்னிஸ் எஜுகேஷன் அறக்கட்டளை. சி. பழனிசாமி மேலான சேலம் மத்திய கூட்டுறவு வங்கி. ரொட்டேரியன் நிர்மலா உதவி ஆளுநர். கௌதமன் சேலம் மாநகராட்சி மாமன்ற நியமன உறுப்பினர் டாக்டர் அத்தியண்ணன் தலைவர் சேலம் மாவட்டம் உதவி கரம் மாற்றுத்திறனாளி நல் வாழ்வு சங்கம். ஜெயச்சந்த் லோடா ஐஆர்சிஎஸ் துணை சேர்மன் சேலம். கார்த்திக் நிறுவனர் ஆல் இந்தியா கலாம் பவுண்டேஷன். கௌசல்யா உமன்ஸ் டெவலப்மெண்ட் அண்ட் ஹுமினாட்டி டிரஸ்ட் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.